1974 சனவரி 24]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) விவர அறிக்கையொன்று@ அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, இந்தப் பயிற்சியிலே கலந்துகொள்வதற்கான குறைந்தபட்சத் தகுதி என்ன நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, லோயர் கிரேடு, ஹையர் கிரேடு என்று பல்வேறு தன்மைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதுபற்றிய விவரக் குறிப்பு என்னிடம் இல்லை. தனியார்த் துறையில் இருக்கும் பல்வேறு நிறுவனங்கள் இந்தப் பயிற்சியை அளிக்கின்றன. இந்தத் தேர்வுகளை நடத்தும் பொறுப்பை மட்டும் தொழில் நுட்ப இயக்குநர் அகம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. பயிற்சி பெறுகிறவர்களுக்கு என்ன என்ன தகுதிகள் என்பதற்குத் தனிக் கேள்வி போட்டால் சொல்லலாம்.

Research on works of Avvaiyar

* 124 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to institute any research project into the works of Avvaiyar in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

THIRU N. DENNIS : Sir, may I know whether all the writings of Avvaiyar have been collected?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அது பற்றி ஆராய்ச்சி முடிப்பதற்கு நாம் தனி குழு ஒன்றும் அமைக்கவில்லை. ஆனால் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சித் துறையில் ஈடுபட்டு இருக்கும் மாணவர்கள் இப்படிப்பட்ட தலைப்புகளை எடுத்துக்கொண்டு ஆராய்ச்சி நடத்தி வருகிறார்கள்.

@ 136–137-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

அது மட்டுமல்லாமல், தனியாக இருக்கும் பேராசிரியர்கள் பலரும் ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். இப்போது மூன்று பல்கலைக் கழகங்களிலும் திருக்குறள் ஆராய்ச்சிக்கு என்று தனியாக ஒரு அறக்கட்டளை நடத்தி வருகிறோம். ஓரளவிற்கு திருக்குறள், சங்க இலக்கியங்கள், மற்றவைகள் பற்றி ஆராய இருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையேற்படுகிறபோது, தனியாக சங்க இலக்கியங்களில் புகழ்பெற்றுள்ள புலவர் பெருமக்களைப் பற்றி ஆராய்ச்சி நடத்தலாம்.

புலவர் சி. பழனிச்சாமி : தலைவரவர்களே, ஔவையார் என்ற பெயரில் பல்வேறு காலங்களில் ஒவ்வொருவர் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. அந்த மூன்று பேர்களைப்பற்றியும் தனித் தனியாக ஆராய்ச்சி நடத்தி, அவற்றை வெளியிட அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் முதலிலேயே சொன்னேன். அது இது குறித்து ஆராய்ச்சி எதையும் நடத்தவில்லை. பல்கலைக் கழகங்கள்தான் நடத்தி வருகின்றன. மற்றவர்களும் வேண்டுமானால் ஆராய்ச்சி நடத்தலாம்.

திரு. என். கே. பழனிசாமி : தலைவரவர்களே, பழைய பழ மொழிகள் இப்போதுள்ள நடைமுறைக்கும், ஜனங்களுடைய நடத்தைக்கும் ஒத்துவராமல் வித்தியாசம் இருப்பதால், சர்க்கார் பணத்தை இந்த மாதிரி ஆராய்ச்சிகளில் விரயம் செய்யாமல் இருக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர வர்களே, விரயம் என்று சொல்வதற்கு இல்லை. நான் முதலில் கூறியபடி, அரசு நேரடியாக இப்படிப்பட்ட வகைகளில் இறங்கிப் பணம் செலவழிப்பது இல்லை. பல்கலைக் கழகங்களில் இது குறித்து ஆராய்ச்சி நடத்துகிறார்கள். இப்படிப்பட்ட ஆராய்ச்சிகளில் பணம் விரயம் ஆகிறது என்று சொல்வதற்கு இல்லை. பல்வேறு நாடுகளில், ரஷ்யா போன்ற நாடுகளில் கூட, மாநில மொழிகளை மேன்மைப்படுத்துவதற்கும், அதை வளம் மிக்கதாக ஆக்குவதற்கும் பெருமுயற்சி எடுத்து இருக்கிறார்கள். இருப்பினும், அரசு தனியாக இப்படிப்பட்ட ஆராய்ச்சிகளுக்காக பணம் செலவழிக்கவில்லை. பல்கலைக் கழகங்கள்தான் இந்த ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

1974 சனவரி 24]

திரு. வை. பாலசுந்தரம்: தலைவரவர்களே, ஔவையார் அவர்களுடைய குறுகிய அடிகளிலே சொல்லப்பட்டு இருக்கின்ற கருத்துக்கள் புரட்சி ஏற்படுத்தக்கூடிய கருத்துக்களாக இருக்கின்றன. அவர்களுடைய 'உண்டி சுருங்குதல் பெண்டிற்கு அழகு' என்பது குடும்பக் கட்டுபாட்டிற்கு ஏற்ற கருத்தாக இருப்பதாக கருதப்படுகிறது. அதுபோல் ஔவையார் அவர்கள் கூறிய கருத்துக்கள் எல்லாம் பெண்டிற்கே உரியதாக இருப்பதால், அதைப் பற்றி ஆராய்ச்சி செய்ய அதில் அரசு மிகத் தீவிரமாக கவனம் செலுத்த முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எப்போது ஆராய்ச்சியாளராக மாறினார் என்று தெரியவில்லை. இப்படிப்பட்ட ஆராய்ச்சிகளைத் தீவிரமாக நடத்தி வெளியிடுவார்களானால் தமிழகம் அதனால் மிகவும் நலம்பெறும்.

மாணவர்களுக்கு விளையாட்டுப் பயிற்சி

* 125 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு** கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விளையாட்டுப் பயிற்சி வகுப்புகளை மாணவர்களுக்கு கட்டாயமாக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஏற்கெனவே அனைத்துப் பள்ளிகளிலும் அனைத்து வகுப்புகளிலும் உடற்பயிற்சி கட்டாயமாகத் தான் இருந்து வருகிறது.

திரு. கோ. இளங்கோவன்: தலைவரவர்களே, தற்போது பள்ளி மாணவர்களுக்கு 'எபிசியன்சி டெஸ்ட்' என்று வைக்கப்படுகிறது. அதில் சில மாணவர்கள்தான் கலந்து கொள்கிறார்கள். எல்லா மாணவர்களும் கலந்து கொள்ளச் செய்யும் வகையில் அதைக் கட்டாயப் பாடமாக ஆக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இந்த உடற்பயிற்சி கட்டாயப் பாடமாக வைக்கப்பட்டு இருக்கிறது. அந்த வகுப்புக்களுக்கு ஒரு குறிப்பிட்ட நாட்கள் வரவேண்டும், அப்படியில்லையென்றால் மேல் வகுப்பிற்கு அனுப்புவது இல்லை என்று